**மாவதகம பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாவதகம பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவதகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(III) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு உரித்தான 6 காணிகளின் பெறுமதி மற்றும் காணிகள் ஏலவிற்பனைகுறிய பொது வசதிகள் தொடர்பில் சபைக்கு கிடைத்த 05 காணிகளின் பெறுமதி ரூபா 15,291,500 ஆன தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் ஆண்டில் கணக்கீடு செய்வற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | சபைக்கு உரித்தான காணிகள் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சபையின் கட்டிட அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட ரூபா 48,983,665 ஆன பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் ஆண்டில் கணக்கீடு செய்வற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | கட்டிட அபிவிருத்திககாக செலவிட்ட தொகை மூலதனமாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2014 ஆம் வருடம் சபைக்கு கிடைத்திருந்த ரூபா 1,000,000 பெறுமதியான ட்ரக்டர் வண்டி நிலையான சொத்துகளின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் கணக்கீடு செய்வற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | சபைக்கு உரித்தான வாகனம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 வகை கணக்குகள் நிதிகூற்றுகளின் பிரகாரம் பெறுமதிகள் மற்றும் அன்மிய அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதிகள் ரூபா 3,044,541 இனால் வேறுபடுவதாக அவதானிக்கப்பட்டதுடன் மீதிகளின் வேறுபாடு தொடர்பாக இணக்கம் செய்யப்பட்டு கணக்குகளை சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | சரியாக கணக்கு வைப்பு பேணப்பட வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மொத்த கூட்டுத் தொகை ரூபா 309,805 ஆன 02 கணக்கு விடயங்களுக்குரிய கணக்காய்விற்கு அவசியமான தகவல்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | சில மீதிகள் நீண்டகாலமாக இருந்து வருவதாகவும் அவை தொடர்பான தகவல்கள் இல்லை. | நிதி கூற்றுக்களில் காட்டப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,025,832 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,862,027 ஆக இருந்தது.

## 2.2. வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 4,948,308 ஆன வீதவரி வரி நிலுவையில் ரூபா 4,261,251 தொகையும், பட்டியல் தொகை ரூபா 5,321,910 தொகையில் ரூபா 1,705,634 ஆன தொகையும் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் கடை வாடகை மற்றும் சொத்து குத்தகை கொடுப்பணவு தொடர்பில் ரூபா 3,050,148 அறவீடு செய்ய வேண்டியிருந்தது. | எதிர்காலத்தில் பணத்தினை அறவிட தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை தொகைகள் உரிய காலத்தில் அறவிடல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 செயலாற்றல்

### 3.1 திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் திண்மக்கழிவு முகாமை தொடர்பில் ரூபா 451,261 தொகை கழிவு மீள்உருவாக்கள் தொகுதியை உள்ளடக்கும் கூரை தயாரிப்பிற்காக மூலதன செலவாகவும், சம்பளம் மற்றும் ஏனைய, போக்குவரத்து செலவு, வழங்கள் உபகரணம் போக்குவரத்து தொடர்பான சேவை. புதுப்பித்தல் தொடர்பில் ரூபா 17,424,577 ஆன தொகை மீண்டெழும் செலவாக செலவீடு செய்து 995 டொன் உக்கலடையும் கழிவுகளும், உக்காத கழிவுகள் 134 டொன் உம் | நாட்டில் காணப்படும் தொற்று நோய் காரணமாக கொம்பொஸ்ட் தயாரிப்பு குறைந்தளவே காணப்பட்டது. | உக்கலடையும் கழிவுகள் முறையான முகாமைத்துவம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

சேகரிக்கப் பட்டடிருந்தது. உக்கலடையும் கழிவுகள் 707 டொன் பயன்படுத்தப்பட்டு 7702 கிலோகிரம் கொம்போஸ்ட் பசளை தயாரித்து விற்பனையூடாக ரூபா 28,392 வருமானம் பெறமுடிந்தது.2

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் பெறவேண்டிய முற்பணம், கொங்றீட் திட்டம், ஏனைய வரிகள், தே.க.வரி,சம்பள மீள்நிரப்பல் மொத்த கூட்டுத் தொகை ரூபா 19,086,169 ஆகும். இது தொடர்பிலான கால பகுப்பாய்வு ஒரு வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் உட்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 61,745 ஆகவும், 5 வருடங்களை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19,024,424 ஆகவும் காணப்பட்டது. | சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் செலுத்த வேண்டிய செலவ / கைத்தொழில் கடன் கொடுத்தோர் மற்றும் வைப்பு மீதி மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 30,916,065 ஆகும். அது தொடரபான கால ஆய்வு அடிப்படையில் ஒன்று தொடக்கம் 05 வருடங்களுக்கு உட்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,966,462 ஆகவும், 5 வருடங்களை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,738,174 ஆகவும் அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |